# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2007 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதிவரி (திருத்தச்) சட்டம்

---

*(2007 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 12 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2006, ஏப்பிறல் மாதம் 12 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை: ரூபா 18.25** **தபாற் செலவு: ரூபா 7.50**

## 2007 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டம்

[2007 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 12 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஒ. 3/2007

### 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**1.** இச்சட்டம் 2007 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலா மென்பதுடன், 2007 சனவரி 1 ஆம் தேதியன்று பயனுக்கு வந்துள் ளதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

*சுருக்கப் பெயர்.*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் 5 ஆம் பிரிவு, அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில், "மொத்தத் தொகையாதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :—

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

"மொத்தத் தொகையாதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், ஏதேனும் அதிஷ்டலாபச் சீட்டி ழுப்பின் கீழ் அளிக்கப்பட்ட சேவைகளின் வழங்கலினது விடயத்தில், அதிஷ்டலாபச் சீட்டுக்களின் விற்பனை ஏதேனுமிருப்பின் அதன்மீது எவரேனும் முகவருக்குச் செலுத்தப்பட்ட ஏதேனும் தரகு, அத்தகைய தரகின்மீது அறவிடப்பட்ட சேர்பெறுமதி வரி உட்பட இவ்வுட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கழிப்பனவுகளுடன் சேர்த்து மேலதிகமாகக் கழிக்கப்படுதல் வேண்டும்."

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "ஆணையாளர் தலைமையதிபதிக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒன்றில் எழுத்தில் அல்லது இலத்திரனியல் வழிவகைகள் மூலம் ஆணையாளர் தலைமையதிபதிக்குக் கொடுத்துதவுதல் வேண் டும்." என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படு கின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :–

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவுக்கான இரண்டாம் காப்பு வாசகத்தில், "சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஏதேனும் தீர்வை உட்பட வேறு வரி அல்லது விதிப்பனவு எதுவும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (அத். 235) கீழான ஏதேனும் தீர்வை உட்பட வேறு வரி அல்லது விதிப்பனவு எதுவும் அல்லது 1979ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழான சுங்கத்தீர்வை எதுவும் அறவிடப்படுதலாகாது" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், அதற்கான நான்காவது காப்புவாசகத்தில், "இச்சட்டத்தின்கீழ் அனுமதிக்கப்படற்பாலதான எவரேனுமாளினால் நான்காம் அட்டவணையில் (ஆடம்பர வீதம்) குறித்துரைக்கப்பட்ட பண்டங்களை அல்லது சேவைகளைக் கொள்வனவு செய்வதன்மீது செலுத்தப்படும் ஏதேனும் உள்ளீட்டு வரி பதினைந்து சதவீதத்துக்கு மட்டுப்படுத்தப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இச்சட்டத்தின்கீழ் அனுமதிக்கப்படற்பாலதான எவரேனுமாளினால் நான்காம் அட்டவணையில் (ஆடம்பர வீதம்) குறித்துரைக்கப்பட்ட பண்டங்களின் கொள்வனவு அல்லது இறக்குமதி அல்லது சேவைகளின் கொள்வனவு, செய்வதன் மீது செலுத்தப்படு உள்ளீட்டு வரி (பிணையத்தின் இடப்பரப்பிலிருந்து பெறப்பட்ட எவையேனும் பண்டங்களுட்பட, உற்பத்தி செய்யும் மற்றும் அவ்வாறு உற்பத்திசெய்யப்பட்ட பண்டங்களை ஏற்றுமதி செய்யும் நோக்கத்துக்காகப் பதிவுசெய்யப்பட்ட ஆளொருவரினால் பயன்படுத்தப்படுவதற்கான மூலப் பொருட்களாகவுள்ள அத்தகைய பண்டங்களை இறக்குமதி செய்யும் அல்லது பெறும் அத்தகைய ஆளினால், இறக்குமதி செய்யப்பட்ட எவையேனும் பண்டங்கள்மீது, செலுத்தப்பட்ட உள்ளீட்டு வரி தொடர்பாகத்தவிர,) பதினைந்து சதவீதத்துக்கு மட்டுப்படுத்தப்படுதல் வேண்டும் ;" என்னும் சொற்களையும் இடுவதன் மூலமும் ;

(3) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில், "அனுமதிக்கப்படற்பாலதான உள்ளீட்டு வரித்தொகை வெளியீட்டு வரித் தொகையை விஞ்சுமாயின்," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "(10) ஆம் உட்பிரிவுக்கமைய, அனுமதியளிக் கப்படற்பாலதான உள்ளீட்டு வரித்தொகை வெளியீட்டு வரித்தொகையை விஞ்சுமாயின்" என்னும் சொற்களை யும் எண்களையும் இடுவதன் மூலமும் ;

(4) அவ்வுட்பிரிவின் (6) ஆம் உட்பிரிவில் —

(அ) (ii) ஆம் உட்பந்தியில் "வரிவிதிக்கப்படற்பால தான செயற்பாடொன்றுடன் தொடர்புபடாத" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வரிவிதிக் கப்படற்பாலதல்லாத செயற்பாடொன்றுடன் தொடர்புபடாத அல்லது வரிவிதிக்கப்படற்பால தான வழங்கலின் பெறுமதியில் உள்ளடக்கப் படாத" என்னும் சொற்களை இடுவதன்மூலம் ;

(ஆ) இரண்டாம் காப்புவாசகத்தில், "2003, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிவிதிக்கற்பாலதான காலப்பகுதி அத்தகைய உள்ளீட்டு வரியின்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2003, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர், ஆனால் 2007, சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரி விதிக்கற்பாலதான காலப்பகுதி அத்தகைய உள்ளீட்டு வரியின்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ;

(5) அப்பிரிவின் (9) ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலமும் :—

"(10) இச்சட்டத்தின் ஏதேனும் வரிதிக்கற்பாலதான காலப்பகுதிக்கு, முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் அனு மதிக்கப்படற்பாலதான உள்ளீட்டு வரிக்கான தொகை, அவ்வரிவிதிக்கற்பாலதான காலப்பகுதிக்கு வெளிப்

படுத்தப்பட்ட வெளியீட்டு வரியின்கீழ் அல்லது இப்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் அனுமதியளிக்கப்படற்பாலதான, உள்ளீட்டு வரியின் எண்பத்தைந்து சதவீதமான குறைந்தவொரு தொகைக்கு மேலும் மட்டுப்படுத்தப்படுதல் வேண்டும். எண்பத்தைந்து சதவீதத்துக்கு மட்டுப்படுத்தப்பட்ட இருபத்திரண்டாம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவிற்கான மூன்றாம் காப்புவாசகத்தில் குறிப்பீடுசெய்யப்பட்ட முறை வழிப்படுத்துதல் இன்றிமீள் விற்பனைக்குப் பண்டங்களை இறக்குமதி செய்யும் பதிவுசெய்யப்பட்ட ஆளொருவரின் விடயத்தில் 2006, திசெம்பர் 31 ஆம் தேதியன்றுள்ளவாறு உள்ளீட்டு வரியிலான மிகை உட்பட அனுமதியளிக்கப்படற்பாலதான உள்ளீட்டு வரியின் மீதி ஏதேனுமிருப்பின், அது, எவ்வாறாயினும் அதே மட்டுப்பாட்டுக்கமைய, அடுத்துப்பின்னரான வரிவிதிக்கற்பாலதான காலப்பகுதியில் அல்லது காலப்பகுதிகளில் அனுமதிக்கப்படற்பாலதான உள்ளீட்டு வரியின் பாகமாக இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் ;

ஆயின், எவ்வாறாயினும், பின்வருவனவற்றுக்கு ஏற்றிக் கூறப்படற்பாலதான உள்ளீட்டு வரி தொடர்பில், மேலேயுள்ள மட்டுப்பாடு ஏற்புடையதாதலாகாது :—

(i) சைவர் வீதமிடப்பட்ட வழங்கல்கள் ;

(ii) பிரிவு 2 இன் (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட புடவைப் பங்கீட்டுச் சபையுடன் அல்லது ஏற்றுமதி அபிவிருத்திச்சபையுடன் பதிவுசெய்யப்பட்ட ஆளினால், விடயத்துக்கேற்ப 1996 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, புடவைப் பங்கீட்டுச் சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட புடவைப் பங்கீட்டுச் சபையுடன், அல்லது 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, ஏற்றுமதி அபிவிருத்திச் சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏற்றுமதி அபிவிருத்திச்சபையுடன் பதிவுசெய்யப்பட்ட ஏற்றுமதியாளர்களுக்குச் செய்யப்பட்ட எந்த

வழங்கல்மீது இச்சட்டத்தின்கீழ் வரி பிற்போடப் படுகின்றதோ அந்த வழங்கல்களாகவுள்ள பின்போடப்பட்ட வழங்கல்கள் ; அத்துடன்

(iii) 22 ஆம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்டவரான ஆளொருவரினால் கருத்திட்ட செயற்பாட்டுக் காலப்பகுதியின் போது உறப்பட்ட கருத்திட்டம் தொடர்புபட்ட பண்டங்கள் அல்லது சேவைகள்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "உரித்துடையவராதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :—

"உரித்துடையவராதல் வேண்டும் :

ஆயின் எவ்வாறாயினும், தொடக்க வரிப்பணப் பட்டிய லொன்றின்மீது குறைவாக உரிமைகோரப்பட்ட உள்ளீடு தொடர்பிலான சரிக்கட்டுதல் வரிவரவுக்குறிப்பு அல்லது வரிப்பற்றுக்குறிப்பு எந்தத் தொடக்க வரிப்பணப் பட்டியல் தொடர்பானதோ அந்தத் தொடக்க வரிப்பணப்பட்டியல் வழங்கப்பட்ட பின்னர் ஆறுமாதங்களுக்குப் பிந்தாமல் வழங்கப்பட்ட வரி வரவுக்குறிப்பு அல்லது வரிப்பற்றுக் குறிப்புத் தொடர்பில் செய்யப்படுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் IIIஆ என்னும் புதிய அத்தியாயத்தை உட்புகுத்துதல்.*

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் IIIஅ என்னும் அத்தி யாயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய அத்தியாயம் இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், இது, அச்சட்டவாக்கத்தின் அத்தியாயம் IIIஆ என்பதாக (பிரிவுகள் 25ஏ முதல் 25ஐ வரை) பயனுறுதலும் வேண்டும் :—

"அத்தியாயம் IIIஆ

*விருப்புச் சேர்பெறுமதி வரியை விதித்தல்.*

25ஏ. (1) (இதனகத்துப்பின்னர் "விருப்புச் சேர் பெறுமதி வரி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) வரியொன்று, 2007, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஒவ்

வொரு காலாண்டுக்கும், ஓராளினால் அல்லது பங்குடைமையினால் இலங்கையில் கொண்டு நடாத்தப்படுகின்ற அல்லது நிறைவேற்றப்படுகின்ற ஒவ்வொரு வரிவிதிக்கற்பாலதான செயற்பாட்டிலுமிருந்தான கூட்டுமொத்த மொத்தவரவின் மீது, அத்தகைய ஆள் அல்லது பங்குடைமை இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க இவ்வத்தியாயத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டிருப்பின், ஐந்துசதவீதப்படி இறுக்கப்படுதல் வேண்டும்.

(2) இவ்வத்தியாயத்தின் நோக்கங்களுக்காக, ஏதேனும் வரிவிதிக்கற்பாலதான செயற்பாடு தொடர்பாக "மொத்த விற்பனைவரவு" என்பது, முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் வழங்கல் அல்லது 7 ஆம் பிரிவின்கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட சைவர் வீதமிடப்பட்ட வழங்கல்கள் அல்லது சட்டத்தின் 3 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட வழங்கல்கள் அல்லது எவையேனும்மூலதனச் சொத்துக்களின் விற்பனை தவிர, இலங்கையில் கொண்டு நடாத்தப்படுகின்ற அல்லது நிறைவேற்றப்படுகின்ற வரிவிதிக்கற்பாலதான செயற்பாடுகள் தொடர்பில் செய்துகொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களிலிருந்து பெறப்பட்ட அல்லது பெறப்படற்பாலதான மொத்தத் தொகை என்று பொருளாகும்.

(3) இவ்வுட்பிரிவில் —

"மூலதனச் சொத்துக்கள்" என்பது, 2006 ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவில் அதற்குக் கொடுக்கப்பட்ட அதே பொருளையுடையதாகும்.

"காலாண்டு" என்பது, ஒவ்வோராண்டினதும் சனவரி முதலாம் நாளன்றும் ஏப்பிறல் முதலாம் நாளன்றும் யூலை முதலாம் நாளன்றும்

ஒற்றோபர் முதலாம் நாளன்றும் தொடங்கும் மூன்று மாதங்களைக்கொண்டவொரு காலப்பகுதி என்று பொருள்படும்.

பதிவு.

25ஐ. (1) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆளொருவர் அல்லது பங்குடைமையொன்று, இவ்வத்தியாயத்தின் கீழ் பதிவுக்காக விண்ணப்பிக்கலாம் என்பதுடன்,–

(அ) ஆணையாளர் தலைமையதிபதி, (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (i) ஆம், (ii) ஆம் உட்பந்திகளிற் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள் இணங்கியொழுகப்படுகின்றனவென அவர் திருப்திப்படின், பதிவுக்காகச் செய்யப்பட்ட வேண்டுகோளின்மீது அத்தகைய ஆளை அல்லது பங்குடைமையைப் பதிவு செய்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆளுக்கு அல்லது பங்குடைமைக்கு உடனடியாக பதிவிலக்கம் ஒன்றைக் குறித்தளித்தலும் வேண்டும் ;

(ஆ) அத்தகைய பதிவானது, எந்தக் காலாண்டில் பெறப்படுகின்றதோ அந்தக் காலாண்டு தொடங்கும் தேதியிலிருந்து மூன்றாண்டுக் காலப்பகுதியொன்றுக்கு அல்லது அத்தகைய ஆளின் அல்லது பங்குடைமையின் கூட்டுமொத்த மொத்தவிற்பனை வரவு எந்தக் காலாண்டில் ஆண்டொன்றுக்கு இரண்டு மில்லியன் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சுகின்றதோ, அந்தக் காலாண்டின் முடிவுவரை, இவற்றுள் எது முதலில் நிகழ்கின்றதோ, அதுவரை, அத்தகைய பதிவு செல்லுபடியுடையதாதல் வேண்டும்.

(2) (அ) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் –

(i) அவரால் அல்லது அதனால் கொண்டுநடாத்தப்படும் அல்லது நிறைவேற்றப்படும் ஒவ்வொரு வரிவிதிக்கற்பாலதான செயற்பாட்டிலிருந்தான அவரது அல்லது அதன் கூட்டுமொத்த மொத்தவிற்பனை வரவு ஆண்டொன்றுக்கு இரண்டு மில்லியன் ஐந்து இலட்சம் ரூபாவை அல்லது காலாண்டொன்றுக்கு ஆறு இலட்சத்து இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாதவராக உள்ளவரும் அல்லது விஞ்சாததாகவுள்ளதும் ; அத்துடன்

(ii) II ஆம் அத்தியாயத்தின்கீழ் பதிவுசெய்யப்படாதவராகவுள்ளவரும் அல்லது பதிவு செய்யப்படாதுள்ளதும் ஆன,

எவரேனுமாளுக்கு அல்லது ஏதேனும் பங்குடைமைக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(ஆ) இவ்வத்தியாயத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட எவரேனுமாள் அல்லது ஏதேனும் பங்குடைமை, இவ்வத்தியாயத்தின்கீழான பதிவு எக்காலப்பகுதியின்போது உளதாயுள்ளதோ அக்காலப்பகுதியின் போது எந்நேரத்திலேனும், அத்தகைய பதிவை இல்லாதாக்கும்படி ஆணையாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பிக்கலாமென்பதுடன், II ஆம் அத்தியாயத்தின்கீழ் தம்மைப் பதிவுசெய்யும்படி ஆணையாளர் தலைமையதிபதிக்கு மேலும் வேண்டுகோள் விடுக்கலாம்.

(இ) அத்தியாயங்கள் I, II, III அல்லது IIIஅ என்பவற்றின் ஏற்பாடுகள், இவ்வத்தியாகத்தின் கீழ் எக் காலப்பகுதியின்போது ஓர் ஆளின் அல்லது

ஒரு பங்குடைமையின் பதிவு உளதாயுள்ளதோ அக்காலப்பகுதியின்போது இல்லாதாக்கப்பட்ட பதிவுக்கு ஏற்புடையனவாதலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 26அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன், இது, அச்சட்டவாக்கத்தின் 26அ, என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"கொடுப்பனவு களிலிருந்து வரியைக் கழிப்பனவு செய்தல்.

26அ. (1) ஒவ்வோர் அரசாங்க முகவர் நிலையமும் எந்த ஒப்பந்தத்துக்குத் திறத்தவராகவுள்ளதோ அந்த ஒப்பந்தத்தைப் பின்பற்றி அல்லது ஓர் ஒப்பந்தத்துக்குத் திறத்தவராகவுள்ள வேறெவரேனுமாளின் சார்பில் ஏதேனும் கொடுப்பனவைச் செய்கின்ற அத்தகைய முகவர் நிலையம், அத்தகைய கொடுப்பனவிலிருந்து அத்தகைய கொடுப்பனவில் உள்ளடக்கப்பட்ட வரியின் மூன்றிலொரு பங்கைக் கழித்தல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு கழிக்கப்பட்ட வரியின் தொகை, அத்தகைய அரசாங்க முகவர் நிலையத்திடமிருந்து குடியரசுக்கு வருமதியான கடனாகவிருத்தலும் வேண்டும் ; அத்துடன் அது உடனடியாக அறவிடப்படற்பாலதாதல் வேண்டும் அல்லது இச்சட்டத்தின்கீழ் அத்தகைய அரசாங்க முகவர் நிலையத் தினால் வேறுவகையில் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் வரியுடன் சேர்த்து மேலதிகமாக (ஏதேனுமிருப்பின்), அத்தகைய அரசாங்க முகவர் நிலையத்தின்மீது மதிப்பிடப்பட்டு அதனிடமிருந்து இறுக்கவும்படலாம் :

ஆயின்,-

(i) அத்தகைய ஒப்பந்தத்தைப் புரிவதற்கான மொத்தப் பிரதிபயன் சேர்பெறுமதி வரி நீங்கலாக ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத விடத்து ; அல்லது

(ii) கொடுப்பனவு, ஒப்பந்தத்தின்மீது வழங்கப்பட்ட பண்டங்களுக்கான உடனடிக் கொடுத்துத்தீர்த்தலாகவுள்ளவிடத்து ; அல்லது

(iii) விடயத்தின் எல்லாச் சூழ்நிலைகளையும் கருத்திற்கொண்டு கழிப்பனவானது செயல் முறைக்குகந்ததல்லதென அல்லது உசித மானதல்லதென ஆணையாளர் தலைமை யதிபதி அபிப்பிராயப்படுமிடத்து,

அத்தகைய கழிப்பனவெதும் செய்யப்படுதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க வரியைக் கழிக்கின்ற ஏதேனும் அரசாங்க முகவர் நிலையம், —

(அ) எந்த ஆளின் கொடுப்பனவிலிருந்து கழிப் பனவு செய்யப்படுகின்றதோ அந்த ஆளுக்கு, பின்வருவனவற்றைக் காட்டுகின்ற கூற்றொன்றை வழங்குதல் வேண்டும்:—

(i) கொடுப்பனவின் முழு மொத்தத் தொகை ;

(ii) மொத்தவரியும் அவ்வாறு கழிக்கப் பட்ட வரியின் மூன்றிலொன்றான தொகையும் ; அத்துடன்

(iii) உண்மையாகச் செலுத்தப்பட்ட தேறிய தொகை.

(ஆ) ஏதேனும் பஞ்சாங்க மாதத்தில் அவ்வாறு கழிக்கப்பட்ட வரியை, அடுத்துப்பின்வரும் மாதத்தின் முதலாவது வார இறுதியில் அல்லது அதற்கு முன்னர், பின்வருவன வற்றைக் காட்டுகின்ற கூற்றுடன் சேர்த்து ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்புதல் வேண்டும் :-

(i) எவ்வாளுக்குக் கொடுப்பனவு செய் யப்பட்டதோ அவ்வாளின் பெயரும்

முகவரியும் மற்றும் அத்தகைய ஆளின் பதிவிலக்கமும் ;

(ii) அத்தகைய கொடுப்பனவின் முழு மொத்தத் தொகை ;

(iii) மொத்த வரியும், கழிக்கப்பட்ட வரியின் மூன்றிலொன்றும், உண்மையாகச் செலுத்தப்பட்ட தொகையும் ; அத்துடன்

(iv) கொடுப்பனவைச் செய்த அரசாங்க முகவர் நிலையத்தின் பெயரும் முகவரியும், மற்றும் பதிவிலக்கம் (ஏதேனுமிருப்பின்) அதுவும் ; அத்துடன்

(v) அனுப்புதொகைகளின் விபரங்களும், காசோலை இலக்கங்களும், கொடுப்பனவுத் தேதியும்.

(3) ஆளொருவரின் வரிவிதிக்கற்பாலனவான வழங்கல்கள், (1)ஆம், (2) ஆம் உட்பிரிவுகளுக்கிணங்க எந்தப் பணத்தொகையிலிருந்து வரி கழிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளதோ அந்தப் பணத்தொகையை உள்ளடக்குமிடத்து, (2) ஆம் உட்பிரிவுக்கிணங்க வழங்கப்பட்ட அத்தகைய பணத்தொகை தொடர்பான சான்றிதழைக் காண்பிப்பதன்மேல், கழிக்கப்பட்ட வரித்தொகையாகச் சான்றிதழில் காட்டப்பட்ட தொகையை அவரினால் செலுத்தப்படற்பாலதான வரிக்கெதிராக எதிரீடு செய்வதற்கு அவர் உரித்துடையவராதல் வேண்டும் :

(4) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, ஒப்பந்தம் என்பது —

(i) தொழில் ஒப்பந்தமாகவிராததும் எத்தன்மைத்தானதுமான நிர்மாணக் கட்டுவேலை அல்லது சேவைகள் தொடர்பிலானதுமான ஏதேனும் ஒப்பந்தம் ;

(ii) பந்தி (i)இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் பண்டங்களை அல்லது சேவைகளை வழங்குவதற்கான ஏதேனும் ஒப்பந்தம் ;

(iii) பந்தி (i)இல் அல்லது (ii)இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பிலான ஏதேனும் உப ஒப்பந்தம் ; அல்லது

(iv) தொழில் ஒப்பந்தம் தவிர, களியாட்டுநராக அல்லது கலைஞராகச் சேவைகளை வழங்குவதற்கான ஒப்பந்தம் உட்பட, சேவைகளை வழங்குவதற்கான ஏதேனும் ஒப்பந்தம்,

என்று பொருளாகும்.

(5) இப்பிரிவின் நோக்கத்துக்காக, "அரசாங்க முகவர் நிலையம்" என்பது, ஏதேனும் அமைச்சு, திணைக்களம், அரசாங்கத்துக்குச் சொந்தமான தொழிற் பொறுப்புமுயற்சி, பகிரங்கக் கூட்டுத் தாபனம், மாகாண சபை, உள்ளூரதிகாரசபை, பல்கலைக்கழகம், அரச வங்கி, அரசாங்கத்தினால் நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்கள் மற்றும் எந்த அரசாங்க நிறுவனத்துக்காகத் திரட்டுநிதியத்திலிருந்து நிதிகள் வழங்கப்படுகின்றனவோ அந்த அரசாங்க நிறுவனத்தினால் நிதியளிக்கப்பட்ட கருத்திட்டம் அத்துடன் முதலீட்டுச்சபை என்றும் பொருளாகும்.

(6) எவரேனும் ஆள் ஓராம் உட்பிரிவின் நியதிகளின்படி வரிக்கழிப்பனவு செய்யத் தவறுகின்ற விடத்து அல்லது (2)ஆம் உட்பிரிவின்கீழ் ஆணையாளர் தலைமையதிபதிக்கு செலுத்தப்படற்பால தான ஏதேனும் வரியை அனுப்பத் தவறுகின்ற விடத்து அவர் எவரேனுமாள், தவணை தவறிய வராகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், வரி அறவீடு தொடர் பான இச்சட்டத்தின் ஏற்பாடுகள், அத்தகைய தவணைதவறுகையின் மீது அதற் கிணங்க ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(7) ஓராம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் கழிப்பனவைச் செய்துள்ளவரான அல்லது (2) ஆம் உட்பிரிவினைப் பின்பற்றி ஏதேனும் அனுப்புகையைச் செய்துள்ளவரான எவரேனுமாள், எவ்வாளினால் வரியானது செலுத்தப்படற்பாலதாகவிருந்ததோ அந்த ஆளினதும் சம்பந்தப்பட்ட வேறு எல்லா ஆட்களினதும் அதிகாரத்தின்கீழ் செயலாற்றியுள்ளவராகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், விடயத்துக்கேற்ப, அத்தகைய கழிப்பனவு அல்லது அனுப்புகை தொடர்பில், ஏதேனும் எழுத்திலான சட்டத்தின், ஒப்பந்தத்தின் அல்லது உடன்படிக்கையின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், எல்லாக் குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளுக்கெதிராக இத்தால் நட்டோத்தரவாதம் அளிக்கவும்படுகின்றார்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 76 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**8.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 76 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற்கான மூன்றாவது காப்புவாசகத்தில், "அத்தகைய வரிவிதிக்கப்படற்பாலதான வழங்கல் எவ்வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதியில் விலக்களிக்கப்பட்ட வழங்கலாக (முச்சக்கர வண்டிகளுக்குக் குத்தகை கொடுத்தல் வசதிகளை வழங்கும் விடயத்திற்றவிர) பின்னர் வருகின்றதோ" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அத்தகைய வரிவிதிக்கப் படற்பாலதான வழங்கல், 2006 திசெம்பர் 31ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் விலக்களிக்கப்பட்ட வழங்கலாக வந்தால்," என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத் துக்கான முதலாம் அட்டவணையைத் திருத்துதல்.*

**9.** முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணை, அதன் பாகம் IIஇல் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அவ்வட்டணையின் (அ) என்னும் பந்தியில் -

(அ) (i) விடயம் (vi)இல், “வானூர்தி எரிபொருள் மற்றும் கப்பல்களுக்கான எண்ணெய்” என்னும் சொற்களுக்குப் பதிலாக “வானூர்தி எரிபொருள், கப்பல்களுக்கான எண்ணெய் மற்றும் இசைவாக்கப்பட்ட உணவுப்பொருள் விவரணத்தின் 2710.19.60 ஆம் இலக்கத்தின்கீழ் குறித்துரைக்கப்பட்ட எரிபொருள் எண்ணெய்,” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.

(ii) விடயம் (vii)இல், “மற்றும் பிறேய்லி எழுதும் பலகைகள் ;” என்னும் சொற்களுக்குப் பதிலாக “பிறேய்லி எழுதும் பலகைகள் மற்றும் அந்நோக்கத்துக்காகச் செய்யப்படும் விண்ணப்பத்தின்மீது அத்தகைய ஆட்களினால் வேண்டப்பட்ட நிவாரணத்தின் அளவைக் கவனத்துட் கொண்டு, அமைச்சரினால் அங்கீகரிக்கப் பட்டவையும், இயலாமைக்குட்பட்ட ஆட்களினால் பயன்படுத்தப்படுபவையுமான வேறெவையேனும் பொருட்கள்;” என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

(ஆ) விடயம் (xiv)ஐ உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன்மூலமும் :-

“(xv) இறால்கள்.”;

(2) அதன் (ஆ) என்னும் பந்தியில் -

(அ) விடயம் (xvi)ஐ உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன்மூலமும் :-

"(xvii) ஏதேனும் திரைப்பட விநியோகத்துக்கான, அல்லது வெளிக்காட்டுகைக்கான ;

(xviii) ஏதேனும் திரைப்படத்தைத் தயாரிப்பதற்கான ஆய்வுகூட வசதிகள் ;

(xix) உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட கைத்தறிப் புடவைகள் ;

(xx) உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய் ;

(xxi) ஏதேனும் கலனை வாடகைக்கமர்த்தும் சேவைகள் ; அத்துடன்

(ஆ) விடயம் (i) (அ) இல், "கல்விச் சேவைகள் ; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக " கல்விச் சேவைகளின் நோக்கெல்லையினுள் அல்லாத ஏதேனும் சேவை அல்லது அரசாங்கப் பாடத்திட்டத்தினுள் அடங்காத அத்தகைய கல்விச் சேவையின் ஏதேனும் பாகம் தவிர்ந்த கல்விச் சேவைகள் ; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(இ) விடயம் (ii)ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :-

"(ii)(அ) (வான் போக்குவரத்து, நீர்ப்போக்குவரத்து அல்லது உல்லாசப்பயணிகளின் போக்குவரத்து, கல்விச் சுற்றுலாக்கள் மற்றும் டாக்சி சேவைகள் தவிர்ந்த) பகிரங்க பயணிகள் போக்குவரத்துச் சேவைகள் ; அல்லது

(ஆ) பின்வருவனவற்றுக்கான குத்தகைக்கு விடுதல் வசதிகளை வழங்குதல் :-

(அ) இருபத்தெட்டுக்குக் குறையாத பயணிகள் ஆசனங்களின், கொள்ளளவுடையவையும், அத்தகைய குத்தகை உடன்படிக்கை 2004, சனவரி 1 ஆம் தேதிக்கு முன்னர் செய்துகொள்ளப்படின் அத்தகைய பகிரங்கப் பயணிகளின் போக்குவரத்துச் சேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றவையுமான அத்தகைய மோட்டார் கோச்சுக்கள் ;

(ஆ) 2005 சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் கொடுப்பனவுக்கு வருமதியாக வரும் வாடகை தொடர்பிலான முச்சக்கரவண்டிகள் ;

(இ) பந்தி (இ)இன் விடயம்(XV)இல் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் பஸ்வண்டி.".

(ஈ) விடயம் (iii)ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :-

"(iii) விநியோகித்தல் உட்பட மின்சாரம்.".

(3) அதன் (இ) என்னும் பந்தியில், விடயம் (XV)ஐ உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன்மூலமும் :-

"(xiii) மின்சாரத்தை வழங்கும் நோக்கத்துக்காக தேவைப்பட்ட இலங்கை மின்சாரச் சபையினால் ஏதேனும் எந்திரத்தொகுதி அல்லது சாதனம் ;

(xiv) இலங்கையில் தயாரிக்கப்பட்டதும், தேசியத் திரைப்படக் கூட்டுத்தாபனத் தவிசாளரின் அங்கீகாரத்துடன் மேலதிகச் செய்முறைப் படுத்தலுக்காக அல்லது அச்சிடுதலுக்காக வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்டதுமான ஏதேனும் திரைப்படம் ;

(xv) பயணிகளின் போக்குவரத்துக்காகப் பயன் படுத்தப்படுவதும், அத்தகைய இறக்குமதி செய்யும் நேரத்தில் ஐந்தாண்டுகளுக்குக் குறையாத காலத்துக்கு அத்தகைய பயன் பாட்டில் இருந்துள்ளதுமான பஸ்வண்டி யொன்றை மாற்றீடுசெய்வதற்காக, தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுவினால் அல் லது ஏதேனும் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையினால் வழங் கப்பட்ட ஏதேனும் செல்லுபடியான மார்க்க அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பவரினால் ஏதேனும் பஸ்வண்டி ;

(xvi) உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமை யதிபதியின் அங்கீகாரத்துடன், தொழிற் சாலைச் சொந்தக்காரர்களினால் தொழிற் சாலைகளை நவீனப்படுத்துவதற்காக, சுங்க நோக்கங்களுக்காகக் குறித்துரைக்கப்பட்ட இசைவாக்கப்பட்ட உணவுப்பொருள் விவரண இலக்கங்களின்கீழ் அடையாளங்காணப்பட்ட எந்திரத்தொகுதி ;

(xvii) உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமை யதிபதியின் அங்கீகாரத்துடன், சுங்க நோக்கங் களுக்காகக் குறித்துரைக்கப்பட்ட இசைவாக் கப்பட்ட உணவுப்பொருள் விவரண இலக்கங் களின்கீழ், பறவைகளை வைத்திருப்பதற்கான எந்திரத்தொகுதி, பறவை அடைகாப்புப் பொறிகளும் அடைகாக்கும் கருவிகளும், இனப்பெருக்க நோக்கங்களுக்காக விலங்கு களை அல்லது கால்நடைகளை, எருமை

மாடுகளை, பறவைகளை, பன்றிகளை, ஆடுகளை, செம்மறியாடுகளையும் இறக்குமதி செய்தலும் அத்துடன் அவற்றின் விந்துகளையும் கருக்களையும் வளர்த்தல் ;

(xviii) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அங்கீகாரத்துக்கமைய, கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சுச் செயலாளரின் விதப்புரையின்மீது பாத அணி உற்பத்தித் தொழிலுக்குப் பயன்படுத்தப்படவேண்டிய செப்பமிடப்பட்ட தோல்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் மூன்றாம் அட்டவணையைத் திருத்துதல்.

**10**. முதன்மைச் சட்டவாக்கத்தின் மூன்றாம் அட்டவணை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) "பின்வருவனவற்றின் வழங்கல் அல்லது இறக்குமதி" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பின்வருவனவற்றில் வழங்கல் அல்லது இறக்குமதி" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) விடயம் (vi) ஐ நீக்கிவிட்டு விடயம் (vii)ஐ விடயம் (vi) என மீள இலக்கமிடுவதன்மூலமும் ;

(3) விடயம் (vi)ஐ உடனடுத்துப் பின்வரும் விடயங்களை உட்புகுத்துவதன்மூலமும் :-

"(vii) சுங்க நோக்கங்களுக்காகக் குறித்துரைக்கப்பட்ட இசைவாக்கப்பட்ட உணவுப்பொருள் விவரண இலக்கங்களின்கீழ் ஆணையாளர் தலைமையதிபதியினால் அடையாளங்காணப்பட்ட உயர்தொழினுட்ப மருத்துவச் சாதனங்கள் அல்லது சீட்டு வழங்கும் எந்திரத் தொகுதியை உற்பத்தி செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் எந்திரத்தொகுதி.

(viii) நகைகள் ; அத்துடன்

(4) அப்பந்தியை (1) ஆம் பந்தியாக மீள இலக்கமிடுவதன் மூலமும், அப்பந்தியின் இறுதியில் பின்வரும் (2) ஆம் பந்தியைச் சேர்ப்பதன்மூலமும் :-

"*(2) சுங்க நோக்கங்களுக்காகக் குறித்துரைக்கப்பட்ட இசைவாக்கப்பட்ட உணவுப்பொருள் விவரண இலக்கங்களின் கீழ் ஆணையாளர் தலைமையதிபதியினால் அடையாளங்காணப்பட்டவையும் தேசியத் திரைப்படக் கூட்டுத்தாபனத் தவிசாளரின் அங்கீகாரத்துடனானவையுமான சினே திரைப்படங்களையும், வெளிக்காட்டப்பட்டு உருவிளக்கப்படுத்தப்பட்ட திரைப்படங்களையும், காந்த சினே ஒலிப்பதிவுக் கருவிகளையும், திரைப்படம்சார் படம்பிடிக்கும் கருவிகளையும் படங்காட்டு கருவிகளையும் பாகங்களையும் துணைப்பொருட்களையும், திரைப்படம்சார் ஆய்வுகூடங்களுக்கான உபகரணங்களையும் சாதனங்களையும் இறக்குமதி செய்தல்.*".

*கடந்த காலத்தை உள்ளடக்கும் பயன்.*

**11.** *(1)* முதலாம் அட்டவணையின் (ஆ) என்னும் பந்திக்கு (XX) ஆம் விடயத்துக்கு விலக்களிப்பை கூட்டிணைத்தல் தவிர, இச்சட்டத்தின் ஏற்பாடுகளினால் முதன்மைச் சட்டவாக்கத்துக்குச் செய்யப்பட்ட திருத்தங்கள், எல்லா நோக்கங்களுக்காகவும் 2007 சனவரி 1 ஆம் தேதியன்று பயனுடையனவாக வந்துவிட்டனவெனக் கருதப்படுதல் வேண்டும்.

(2) பந்தி (ஆ)வுக்கு (XX) ஆம் விடயத்திற் கூட்டிணைக்கப்பட்ட விலக்களிப்பு, 2006 யூலை 1 ஆம் தேதியன்று பயனுடையதாக வந்துவிட்டதெனக் கருதப்படுதல் வேண்டும்.

*நட்டோத்தர வாதம்.*

**12.** இரண்டாயிரத்து ஏழாம் ஆண்டு சனவரி 1 ஆம் தேதியன்று தொடங்குகின்றதும், இச்சட்டம் நடைமுறைக்குவருகின்ற தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதியின்போது, இச்சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாகச் சேர்பெறுமதி வரியைச் சேகரிக்கும் எவரேனுமாள், உரிய அதிகாரத்துடன் செயலாற்றியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய சேகரிப்பு, எல்லா நோக்கங்களுக்காகவும், செல்லுபடியானதாகச் செய்யப்பட்டுள்ளதாகவும், செய்யப்படுவதாகவும் கருதப்படுதலும் வேண்டும் ; அத்துடன் அத்தகைய ஆள், அத்தகைய சேகரிப்புத் தொடர்பில் எல்லாக் குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளுக்கெதிராக இத்தால் நட்டோத்தரவாதமளிக்கப்படுகின்றார்.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**13.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*